பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 03 2026 SUNDAY 6.45 AM

## வணக்கம் - மாநில செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக மத்திய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது.

3. இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால் மட்டுமே, தேர்தலில் வாக்களிக்க முடியும் என்று தமிழக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

4. தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த சில நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபய் சிங், வீர் சோட்ராணி, அனகாத் சிங் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஜல்சக்தி துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் வெளியிட்டுள்ள கட்டுரையை பகிர்ந்துள்ளார்.

எதிர்கால தலைமுறையினர் பயனடையும் வகையில், நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள், நீடித்த பயன்பாடு, சமூக ஈடுபாடு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்தும் பிரதமர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விநியோகம் தடையின்றி நடைபெற்று வருவதாக மத்திய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய பெட்ரோலியத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றமான சூழலை அடுத்து, எரிபொருள் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு சமையல் எரிவாயு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்கி வைப்பவர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, கப்பல் போக்குவரத்து, துறைமுக செயல்பாடுகள், இந்திய மாலுமிகளின் பாதுகாப்பு மற்றும் கடல்சார் வர்த்தகம் ஆகியவற்றை அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாக மத்திய துறைமுகங்கள் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, ஈராக்கிலிருந்து 15 இந்திய மாலுமிகள் உட்பட இதுவரை 500 மாலுமிகள் பத்திரமாக தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இந்நிலையில், மேற்காசியாவில் உள்ள பல்வேறு நாடுகளிலிருந்து இதுவரை 3 லட்சத்து 30 ஆயிரம் இந்தியர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

மேலும், தேவைப்படும் இடங்களிலிருந்து இந்தியர்களை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>><<<<<

சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மத்திய விளையாட்டு அமைச்சகம் சார்பில் மை பாரத் அமைப்பு சார்பில் நாடுமுழுவதும் பாதயாத்திரை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட இளம் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாவட்டந்தோறும் ஷஹீத் திவஸ் பாதயாத்திரை நடத்தப்பட்டு வருவதாக மதுரை மாவட்ட மைபாரத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. மீனாட்சி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்-மீனாட்சி 44 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தேர்தலை நடத்துவதில் வெளிப்படைத் தன்மையையும், அரசியல் கட்சிகளின் பொறுப்புணர்வையும் உறுதி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

இதுதொடர்பாக, தமிழக தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும், 136 பொதுப்பார்வையாளர்கள், 40 காவல் பார்வையாளர்கள் மற்றும் 151 செலவினப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், தேர்தல் தொடர்பான புகார்களை நேரடியாக பதிவு செய்யவும், விதிமீறல்கள் குறித்து புகார் தெரிவிக்க ஏதுவாகவும், மத்திய பார்வையாளர்களின் விவரங்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலம் பகிரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் செலவினங்களை கண்காணிப்புக் குழுக்கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக, மாநிலத்தில் இதுவரை 23 கோடியே 74 லட்சம் கோடி ரூபாய் ரொக்கம் உட்பட 75 கோடியே 3 லட்சம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத வாக்காளர்கள் தங்களது பெயரை சேர்ப்பதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள், இம்மாதம் 26ஆம் தேதி என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் வேட்புமனு தாக்கல், வேட்புமனுக்களை சமர்ப்பிப்பதற்கான நேர ஒதுக்கீடுகளை முன்பதிவு செய்தல், பொதுக்கூட்டங்கள், பேரணிகள் நடத்த அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் போன்ற நடைமுறைகளை பின்பற்றுவதற்கு தேர்தல் ஆணையத்தின் SUVIDA இணையதளத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் முடிவடைந்த பின் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால் மட்டுமே, நடைபெறவுள்ள

சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க முடியும் என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் நோக்கில், தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*

*இதனிடையே, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் பதற்றமான வாக்குச்சாவடிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. சியாமளாதேவி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.*

*மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், திருமங்கலம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு பொதுப்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள மிங்மா டி ஷெர்பா, வாக்குப்பதிவு மையங்களை பார்வையிட்டதுடன், தேர்தல் பணியாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.*

>>>>><<<<<

*வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த சில நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

*தமிழகத்தில் அடுத்த 3 தினங்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

>>>>><<<<<

***இருவரிச் செய்திகள்***

*மேற்காசியாவில் நிலவும் போர் பதற்றம் காரணமாக, உலகளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளதையடுத்து, இலங்கையில் எரிபொருட்களின் விலை 30 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.*

>>>>><<<<<

*ரஷ்யாவின் எரிசக்தி விநியோகத்தை, ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தலைவர்கள் தொடர்ந்து நிராகரித்து வருவதன் காரணமாக, இப்பிராந்தியத்தில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.*

*>>>>><<<<<*

*இந்திய பெருங்கடல் பகுதியில், DIEGO GARCIA தீவுகளில் உள்ள பிரிட்டன் - அமெரிக்கா நாடுகளின் விமானத் தளங்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு பிரிட்டன் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*மும்பையின் மேற்குப் பகுதியில், வெர்சோவா - பாயான்தர் இடையே கடற்கரையோர சாலை திட்டத்திற்காக, அப்பகுதியில் உள்ள அலையாத்தி காடுகளில் உள்ள மரங்களை வெட்டுவதற்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.*

*>>>>><<<<<*

*சிக்கிமில் நேற்று மாலை மிதமான நிலஅதிர்வு உணரப்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 4 புள்ளி ஒன்றாக பதிவானது.*

*>>>>><<<<<*

*வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு, முதலீடு செய்ய உகந்த மாநிலமாக ஹரியானா உருவெடுத்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்காக வருமான வரித்துறையின் சார்பில் 24 மணிநேரமும் செயல்படும் பிரத்யேக கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளன.*

*>>>>><<<<<*

*ரம்ஜான் பண்டிகை மற்றும் வார விடுமுறை காரணமாக, நீலகிரி மாவட்டம், உதகையில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.*

*>>>>><<<<<*

*திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோவில், பங்குனித் திருவிழாவையொட்டி, நேற்றிரவு நடைபெற்ற திருக்கல்யாண உற்சவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.*

*>>>>><<<<<*

***விளையாட்டுச் செய்திகள்***

*இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபய் சிங், வீர் சோட்ராணி, அனகாத் சிங் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.*

*மும்பையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் அபய் சிங் 11-9, 9-11, 11-3, 11-8 என்ற செட் கணக்கில் மலேசியாவின் Amishenraj Chandran - ஐ வென்றார்.*

*மற்றொரு அரையிறுதிப் போட்டியில், இந்தியாவின், வீர் சோட்ராணி 11-7, 11-5, 5-11, 11-6 என்ற செட் கணக்கில் மலேசியாவின் சஞ்சய் ஜீவா - வை வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி போட்டியில், இந்தியாவின் அனகத் சிங் 11-6, 9-11, 11-8, 11-2 என்ற செட் கணக்கில், தன்வி கன்னாவை வென்றார்.*

*>>>>><<<<<*

*தேசிய சீனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் மானவ் தாக்கரும், yashaswini Ghorpade-வும் பட்டம் வென்றனர்.*

*இந்தூரில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில், மானவ் தாக்கர் 11-8, 11-9, 9-11, 11-6, 11-7 என்ற செட் கணக்கில் ஜீத் சந்திரா-வை வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர்.*

*மகளிர் பிரிவு இறுதி ஆட்டத்தில், yashaswini Ghorpade 11-9, 6-11, 11-7, 8-11, 11-9, 7-11, 11-8 என்ற செட் கணக்கில் Syndrela das - ஐ வென்று பட்டத்தைக் கைப்பற்றினர்.*

*கலப்பு இரட்டையர் பிரிவில், ANKUR BHATTACHARJEE - SUHANA SAINI இணை தங்கப் பதக்கம் வென்றது.*

*இந்த இணை 11-9, 11-7, 9-11, 13-15, 12-10 என்ற செட் கணக்கில் ANIKET BOSE - SAMPRITI ROY இணையை வென்று இப்பதக்கத்தைக் கைப்பற்றியது.*

*>>>>>END<<<<<*